# அடி பிறழாமல் விடை தருக!

த.வெ.க. அரசு அமைந்தது முதலாக அரசுப் பள்ளிகளில் நடைபெற்ற அசம்பாவிதங்களை கல்வியாளர்கள் முதல் அரசியல் தலைவர்கள் வரை பலரும் கண்டித்தோம். பேருந்தில் இடம் பிடிப்பதை போல த.வெ.க. துண்டை தூக்கி எறிந்து வகுப்பறை பெஞ்சுகளில் இடம் பிடித்தார்கள் அக்கட்சியினர்! மாணவர்களுக்கு கல்வியையும் அறத்தையும் கற்றுத்தர வேண்டிய இடங்களில் அரசியல் கூட்டம் போல கோஷம் போட வைத்தார்கள். இவற்றை யெல்லாம் நம்மோடு சேர்ந்து இன்றைய கல்வி அமைச்சரும் கண்டித்தார்! அறிக்கை விடுத்தார்! அடுத்தநாளேஅக்கட்சியினர்மீண்டும்பள்ளிகளுக்குள் படையெடுத்தனர்!

இந்த மாதிரியான அட்ராசிட்டிகளும் ஒருவகையான Take diversionதான் என இப்போது தோன்றுகிறது. ஏனென்றால் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை மீது ஏகப்பட்ட கேள்விகள் இருக்கிறது. அக்கேள்விகள் தங்கள் மீது பாயக்கூடாது என்பதற்காகத்தான் கால்வாயை நேரடியாக கடலுக்குள் திருப்பி விட்டார்களோ எனும் எண்ணம் மேலோங்குகிறது.

மக்களின் சார்பாக, ஆசிரியர்கள், மாணவர்களின் சார்பாக தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சரிடமும், இந்த Take Diversion அரசிடமும் சில கேள்விகளை முன்வைக்கிறோம். அனைத்துக் கேள்விகளுக்கும் அடி பிறழாமல் விடையளிக்க வேண்டியது அவர்களின் கடமை.

**I. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

**கேள்வி 1 :** அமைச்சர் செங்கோட்டையன் அவர்கள் ‘மாணவர்களுக்கு Identity Card வழங்கப்படும்’ என சில நாட்களுக்கு முன்னதாக அறிவித்தார். ‘அதில் சாதி விவரங்களும் இருக்கும்’ என்றார். திராவிட இயக்கங்கள் போன்ற முற்போக்கு இயக்கங்களின் எதிர்ப்புக்குப் பிறகு ‘அது அப்படி இல்லை. தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டது’ என்றார். சரி தவறாகவே புரிந்துகொண்டோம் என வைத்துக்கொள்வோம். மற்ற விவரங்களை ஏன் அடையாள அட்டையில் பதிய வேண்டும். மற்ற விவரங்கள் என்றால் என்னென்ன விவரங்கள் என்பதை முதலில் தெளிவுபடுத்த வேண்டும். இந்த முறையைத்தான் ஒன்றிய அரசின் தேசியக் கல்விக் கொள்கையிலும் வலியுறுத்துகிறார்கள். APAAR(Automated Permanent Academic Account Registry) Card வழங்கும் திட்டத்தை NEP2020 முன்வைக்கிறது. அதாவது ‘ஒரே நாடு ஒரே அடையாள அட்டை’ என்ற அடிப்படையில் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறையும் செயல்படப்போகிறதா? அரசுப் பள்ளி மாணவர்களின் தகவல்களை ஒன்றிய அரசிடம் அதிகாரப்பூர்வமாக ஒப்படைக்கும் திட்டத்தை செயல்படுத்தப்போகிறதா? ‘சாதி விவரங்கள் இடம்பெறாது’ என கூறியுள்ள நிலையில் இந்த முறையே பின்பற்றப்படாது எனும் உறுதிமொழியை வழங்க அரசு தயாராக உள்ளதா? அல்லது என்னென்ன விவரங்கள் இடம்பெறும் என்பதை இந்த Transparent அரசு விளக்க வேண்டும்.

**கேள்வி 2 :** திண்டுக்கல் மாவட்டம் அய்யலூரை அடுத்த தங்கம்மாபட்டியில் இயங்கிவரும் அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவர்கள் அருந்தும் குடிநீர் தொட்டியில் மலம் கலப்பு! திருப்பத்தூர் கேதாண்டப்பட்டி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் கழிவுநீரை மாணவர்கள் அகற்றியுள்ளார்கள்.

இதை உங்கள் கூட்டணிக் கட்சியின் மாணிக்க தாகூர் அவர்களும் கண்டித்துள்ளார் (விஜய் சார் பிரதமர் வேட்பாளர் என்றவுடன் கோபப்பட்டு கண்டித்தாரா என்பது விளங்கவில்லை. ஆனால் கண்டித்தது சரிதான்)

இதுபோன்ற நிகழ்வுகளை தடுப்பதற்கு அரசு என்ன மாதிரியான நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பதை மக்களுக்கும் மாண்புமிகு மாணவர்களுக்கும் தெரியப்படுத்துங்கள்.

**கேள்வி 3 :** முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் சேரும் தமிழ்நாட்டு அரசுப் பள்ளி மாணவர்களின்



**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
மேனாள் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்

எண்ணிக்கை ஆண்டுதோறும் ஆகஸ்ட் முதல் வாரத்திலேயே தெரியும். அவர்களுக்கான பாராட்டு விழாவும் நடைபெறும். இந்தாண்டு முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கையை இதுவரை வெளியிடாதது ஏன்?

‘கொள்கை விளக்கப் புத்தகத்தில் எழுதியுள்ளோம். படித்துப்பாருங்கள்’ என மேதாவித்தனமாகப் பேசாமல், மக்களுக்குச் சொல்லுங்கள் சார். தேர்வாகியுள்ள மாணவர்களை அழைத்து பாராட்டு விழா நடத்தப்படுமா? அல்லது அவர்களையும் உங்கள் கட்சிப் பெயரை சொல்லச் சொல்லி கோஷம் போட வைப்பீர்களா?

**கேள்வி 4 :** தமிழில் வெளியான சிறந்த நூல்களை ஆங்கிலம் முதலான அயல் மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிடும் முயற்சியான ‘திசைதோறும் திராவிடம்’ திட்டத்தின் கீழ் இதுவரை 74 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதன் தற்போதைய நிலை என்ன? கொள்கை புத்தகத்திலும் இதுகுறித்த விளக்கம் இல்லை!

**கேள்வி 5 :** திராவிட மாடல் அரசால் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட மாவட்ட புத்தகத் திருவிழாக் களுக்கான நிதியை அதிகரித்துள்ளீர்கள். நல்லது... அதே நேரத்தில் இலக்கியத் திருவிழாக்கள் பற்றி ஏன் பேச மறுத்துள்ளீர்கள். இலக்கியத் திருவிழாக்கள் நடத்தப்படுமா?

**கேள்வி 6 :** முத்தமிழறிஞர் கலைஞர் மொழி பெயர்ப்புத் திட்டம் தொடருமா?

**கேள்வி 7 :** ‘திராவிடக் களஞ்சியம்’ திட்டத்தின் மூலம் கழக ஆட்சியில் மொத்தம் 7 தொகுப்பு நூல்கள் வெளியிடப்பட்டன. இந்த ஏழு தொகுப்புகளும் மொத்தம் 4,740 பக்கங்களைக் கொண்டது. மீதம் உள்ள 7 தொகுப்புகள் இந்த ஆட்சியில் வெளியிடப் படுமா?

**கேள்வி 8 :** PM Shri பள்ளி திட்டம் குறித்த நிலைப்பாடு தான் என்ன? ‘முதலமைச்சரிடம் இத்திட்டம் குறித்து விவாதித்துள்ளோம்’ என்றும் ‘அதிகாரிகளுடன் ஆலோசித்து இத்திட்டம் குறித்து முடிவெடுக்கப்படும்’ என்றும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சரின் விளக்கங்கள் ஊடகங்களில் வந்தது. இந்த விளக்கம் வந்த இரண்டொரு நாளில் ABVP நிர்வாகிகள் சட்டமன்றத்திற்கு வந்தார்கள். ‘PM Shri திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியங்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்கப்படும் என முதலமைச்சர் விஜய் தெரிவித்துள்ளார்’ என்றும் ABVP அமைப்பினர் பேட்டியளித்தனர். ஆக மொத்தம் இத்திட்டம் மீது என்னதான் ஆலோசனை நடக்கிறது? தமிழ்நாட்டிற்குள் PM Shri பள்ளி வரப்போகிறதா? இல்லையா?

**கேள்வி 9 :** ‘ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்திற்கான ஒன்றிய அரசின் தமிழ்நாட்டிற்கான நிதி ரூ.5,109 கோடி நிலுவையில் உள்ளது’ என கொள்கை விளக்கக் குறிப்பில் கூறியுள்ளீர்கள். ஒன்றிய அரசை வலியுறுத்தி பெறுவது ஒருபுறம் இருக்கட்டும். அதற்காக உங்களுடன் சேர்ந்து நாங்களும் குரல் கொடுக்கிறோம். ஆனால் இதுகுறித்து ஏன் சார் சட்டமன்றத்தில் விவரிக்காமல் தவிர்த்தீர்கள்? மாணவர்களின் நலன் சார்ந்த விஷயம் அல்லவா இது? கல்வி வளர்ச்சி சார்ந்தது அல்லவா? துறை சாராத கேள்விகளுக்கெல்லாம் எழுந்து பேசும் அமைச்சர் ராஜ்மோகன் ஏன் இதுகுறித்து இதுவரையிலும் பேசவில்லை?

**கேள்வி 10 :** ஆசிரியர் தகுதித் தேர்வு தீர்மானம் கொண்டு வந்ததற்கு முதல் நாள் ‘ஆசிரியர் தகுதித் தேர்விற்கான மதிப்பெண்களை குறைக்க முடியாது’ என ஏன் கம்பீரமாக உச்சநீதிமன்றத்தில் வாதாடி உள்ளீர்கள். ஏன் இந்த இரட்டை வேடம்? என ஆசிரியர்கள் கேட்கிறார்கள்.

இந்த 10 கேள்விகளையும் ஆசிரியப் பெருமக்களின், மாணவர்களின் கேள்விகளாக நினைத்து அவசியம் பதில் அளிக்கவும்.

**II. ‘எல்லாருக்கும் தெரியும்! ஆனால் உங்களுக்குத் தெரியாத சில தகவல்கள்!**

**ஜூன் 4:** செங்கல்பட்டு மாவட்டம், வேண்பாக்கம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், ஆலப்பாக்கம் த.வெ.க. ஊராட்சி செயலாளர் செந்தில்குமார் தலைமையில் த.வெ.க.வினர் பரிசுப் பொருட்களை வழங்கி பள்ளிக் குழந்தைகள் மத்தியில் அரசியல் பிரச்சாரம் மேற்கொண்டது சர்ச்சையை ஏற்படுத்தி யுள்ளது.

**ஜூன் 17:** ஆரணியில் ஒரே நாளில் இருவேறு இடங்களில் இரண்டு மாணவிகளுக்குப் பாலியல் தொந்தரவு.

**ஜூன் 18:** ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் வகுப்பறைக்குள் புகுந்து த.வெ.க.வினர் முதலமைச்சர் படத்தை மாட்டி இடையூறு.

**ஜூன் 18:** காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம், தளவராம்பூண்டி ஊராட்சியில் வினோபா நகர் பகுதியில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி செயல்பட்டு வருகிறது. இங்கு காலை 11 மணியளவில் த.வெ.க. கட்சியின் ஒன்றிய செயலாளர் ராஜேஷ் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்டோர் மாணவ, மாணவிகள் பாடம் படித்துக் கொண்டிருந்தபோது திடீரென வகுப்பறைக்குள் நுழைந்து செல்போன்களுடன் ரீல்ஸ் எடுத்தனர். மேலும் கையில் வைத்திருந்த படத்தைக் காட்டி இவர் யார் என்று தெரிகிறதா என்று மாணவ, மாணவிகளுக்குப் பாடம் எடுக்கத் தொடங்கினர்.

**ஜூன் 24:** காஞ்சிபுரம் ஜே.ஜே.நகரில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பாடவேளை நடந்துகொண்டிருந்த போதே மாணவர்களை த.வெ.க.வினர் நடத்திய நிகழ்ச்சிக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

**ஜூலை 3:** சிவகாசியை அடுத்த திருத்தங்கல் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் அமைச்சர் கீர்த்தனா ஆய்வு. எளிய பின்னணியில் இருந்து வந்த மாணவியிடம் மேட்டிமைத் தனத்தோடு அவர் நடந்துகொண்ட விதம், நாடு முழுவதும் கண்டனத்தை பெற்றது.

**ஜூலை 7:** திருத்தணி அருகே அரசுப்பள்ளிக்குள் நுழைந்து முதலமைச்சர் படத்தை மாட்டிவிட்டு, த.வெ.க.வினர் ரீல்ஸ் எடுத்தனர்.

**ஜூலை 16:** சிவகங்கை மாவட்டம் இளையான்குடி அருகே உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் 12ஆம் வகுப்பு மாணவனுக்கு சக மாணவரால் கத்திக்குத்து. பள்ளி வளாகத்திலேயே மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட சாதிய ரீதியான குழு மோதலில் பழிவாங்கும் நோக்கில் தாக்குதல்.

**ஆகஸ்ட் 14 :** சென்னை திருவொற்றியூரை அடுத்த விம்கோ நகர் ஜெயகோபால் கரோடியா அரசு மேல்நிலைப் பள்ளி பிளஸ் 2 மாணவர் தனுஷ், ஆகஸ்ட் 12 அன்று சக மாணவர்களின் கஞ்சா பயன்பாட்டை ஆசிரியருக்குத் தெரியப்படுத்தியதால் ஆகஸ்ட் 14, 2026 அன்று மாலையில் சக மாணவர்களால் பேருந்து நிலையம் அருகில் வைத்துத் தாக்கிப் படுகொலை. ஆனால் ‘சீனியாரிட்டி’ தொடர்பான முன்விரோத மோதலில் பிளஸ் 1 மாணவர் மற்றும் கூட்டாளிகள் அடித்துக் கொலை என வழக்குப்பதிவு.


### சிறு கனிமங்கள் துறை ஒன்றிய பா.ஜ.க. அரசு கட்டுப்பாட்டில் கொண்டு சென்றதை கண்டித்து

## சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டுவர தைரியம் உள்ளதா?

### த.வெ.க. அரசுக்கு சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

நெல்லை.செப். 2 .

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு. அப்பாவு தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:-



2021-2026இல் தி.மு.க.ஆட்சியில் இருந்த போது ஒன்றிய பா.ஜ.க. அரசால் கொண்டுவரப்பட்ட விவசாயி களுக்கு எதிரான வேளாண் திருத்தச் சட்டம், குடியுரிமை திருத்தச் சட்டம், நீட் தேர்வு, ஒரே நாடு ஒரே தேர்தல், தொகுதி மறுவரையறை மற்றும் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் நிதியை குறைப்பதற்கும், பெயரை மாற்றுவதற்கும் எதிரான தீர்மானங்கள் மற்றும் மசோதாக்கள் சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்டு ஒன்றிய பா.ஜ.க. அரசை நேரடியாக எதிர்த்து மக்கள் பக்கம் நின்று வெற்றியைத் தந்தவர் முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

மதுரை மாவட்டம் அரிட்டாபட்டியில் ஒன்றிய பா.ஜ.க.அரசு கனிமம் எடுக்க முயற்சித்த போது “நான் முதல்வர் பதவியை இழந்தாலும்” அரிட்டாபட்டியில் கனிமங்கள் எடுக்க ஒன்றிய பா.ஜ.க. அரசை அனுமதிக்க மாட்டேன் என்று சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து, தமிழக மக்களுக்கு வெற்றியை பெற்று தந்தவர் முன்னாள் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள்.

தற்போது மாநில பட்டியலில் உள்ள சிறு கனிமங்கள் துறை நாடாளுமன்ற மசோதா மூலம் ஒன்றிய பா.ஜ.க.அரசு கட்டுப்பாட்டிற்கு கொண்டு சென்றதை கண்டித்து தமிழக சட்டமன்றத்தில் தீர்மானமோ, மசோதாவோ கொண்டு வருவதற்கு தைரியம் இருக்கிறதா CMsir?

பல்கலைக்கழக வேந்தர்கள் மற்றும் துணை வேந்தர்கள் நியமனம் மாநில அரசின் உரிமை என்று சட்டமன்றத்தில் மசோதா கொண்டு வந்து ஆளுநர் ஒப்புதல் பெற ஆண்மை இருக்கிறதா CMsir?

தி.மு.க.ஆட்சி காலத்தில் ஆன்லைன் சூதாட்டத்திற்கு சட்டமன்றத்தில் மசோதா கொண்டு வந்து ஆளுநர் ஒப்புதல் பெற்று சட்டப்படி தடை செய்த முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் போன்று ஆன்லைன் லாட்டரி விற்பனைத் தடைச் சட்டம் கொண்டுவர இயலாத சுயநலவாதி யாக இருக்கிறீர்களா! CMsir?

இவ்வாறு அவர் தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.



கழக மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அவர்களின் தாயார் மறைந்த ஏ.கே.எஸ். சுப்பம்மாள் அம்மையாரின் நினைவேந்தல் நிகழ்வில் கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று அம்மையாரின் திருஉருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்வில் ச.முரசொலி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் துரை. சந்திரசேகரன், மாவட்ட துணை செயலாளர் எம்.எஸ்.கார்த்திக், நகர செயலாளர் ஆர்.எஸ்.பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் கலைவாணி மோகன் , ஒன்றிய செயலாளர்கள் வீ.எஸ்.ஆர். தேவதாஸ், பாலஞானவேல், இரா.மனோகரன், உள்ளிட்ட மாநில மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளை கழக, வார்டு கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

## தஞ்சை வடக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் அறிவிப்பு!

தஞ்சாவூர், செப். 2 -

தஞ்சை வடக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம், கும்பகோணம் கழக பணிமனையில் 06.09.2026 அன்று நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.



அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:

தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம், 06.09.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணியளவில் குடந்தை கழகப் பணிமனையில் மாவட்டக் கழக அவைத் தலைவர் க.நசீர்முகமது தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் கூட்டத்தில் முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகி கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் குறித்த நேரத்தில் தவறாது கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. கழக முப்பெரும் விழா.

2. கழக மறு சீரமைப்பு குழு பிரதிநிதிகள் வருகை குறித்து

3. கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு தஞ்சை மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க. அன்பழகன் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

## புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர்கள் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லபாண்டியன் அறிவிப்பு!

புதுக்கோட்டை, செப். 2 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:





புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் எதிர்வரும் 5.09.2025 சனிக்கிழமை காலை 10மணியளவில் புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா (ஏசி) மஹாலில் புதுக்கோட்டை தலைமை கழக பிரதிநிதிகள் ஏ.கே.எஸ்.விஜயன், மதுரை பாலா ஆகியோர் தலைமையில் நடைபெறுகிறது. முன்னாள் அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், அறந்தாங்கி ராசன், முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, கவிச் சுடர் கவிதைப்பித்தன், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம். அப்துல்லா, டாக்டர் வை. முத்துராஜா எம்.எல்.ஏ. மேயர் திலகவதி செந்தில், அஞ்சுகாமீனாட்சிசுந்தரம், புதுக்கோட்டை விஜயா, த.சந்திரசேகரன், பி.டி.அரசக்குமார், வி. என்.மணி, சுப.சரவணன், பரணி இ.ஏ.கார்த்திகேயன், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, செ.அசோக்பாண்டியன் கே.ஆர்.என்.போஸ், அரு.வீரமணி, அ.சுப்பிரமணியன், எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, ஞான. இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, அடைக்கலம், எம்.லியாகத்அலி, அபுதாஹீர், கீரை.தமிழ் ராஜா, சு.சண்முகம், இரா. ஆனந்த், எஸ்.ஜெயராமன், ஆர்.ஆர்.கே.கலைமணி, வே.ராஜேஸ், க.ராஜேந்திரன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பி க்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்: 22.8.2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமைச் செயற்குழு கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின் படி ஒன்றிய, நகர, பேரூர் கழகம் மறு சீரமைப்பு பணிகள் சம்பந்தமாக, கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளனர்.